அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 22/99 (XXIX)

எனது இல:- EST-7/TRPOT/05/1012
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும் 07
2013.10.31

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**சகல வெளிநாட்டு நாணயங்களிற்கும் குறித்த திகதி ஒன்றில் பிரயோகிக்கப்படுவதற்கு, 1999.10.08 ஆம் திகதிய 22/99 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக ஓய்வுக்காலத்தின் போது அரச அலுவலர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகை அடிப்படை குறித்த வாகன இறக்குமதி அனுமதிப்பத்திர பெறுமதியினை நிர்ணயித்தல்**

1999.10.08 ஆம் திகதிய "அரச அலுவலர்கள்/ நீதித்துறை அலுவலர்கள்/ அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்டச் சபைகளின் அலுவலர்களுக்கான உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகள்" தொடர்பான 22/99 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மற்றும் கூறப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைத் திருத்தி வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. யூஎஸ் டொலரின் நாணயமாற்று விகிதத்துடன் தொடர்புற்ற மேற்படி சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட வாகன இறக்குமதி அனுமதிப்பத்திர பெறுமதியின் கணிப்பானது நாணயக்கடிதம் அனுமதிப்பத்திரதாரியினால் திறக்கப்பட்ட நாளிலுள்ள யூஎஸ் டொலரின் பெறுமதியின் அடிப்படையில் அமைந்திருத்தல் வேண்டும்.

03. இச் சுற்றறிக்கை பொதுத்திறைசேரியின் இணக்கத்துடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு